பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 08 2024 **WEDNESDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 12 நவீன தொழில் நகரங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டம் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

3. நியாயவிலைக் கடைகளில் வரும் 31ஆம் தேதி அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கிடைக்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. வங்கக்கடலில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 28 ஆயிரத்து 602 கோடி ரூபாய் முதலீட்டில் 12 நவீன தொழில் நகரங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், 10 மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த நவீன தொழில் நகரங்கள் இடம்பெறுவதாக கூறினார்.

நாடுமுழுவதும் 234 நகரங்களில் 730 தனியார் பண்பலை ஒலிபரப்பை தொடங்குவதற்கான மின்னணு ஏலம் நடத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

உள்ளூர் ஒலிபரப்புக்கும், வட்டார மொழிவழக்கிற்கும் ஊக்கமளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

வேளாண் கட்டமைப்பு நிதியத்தை விரிவுபடுத்துவதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதற்கிடையே, நவீன தொழில் நகரங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் முக்கிய நடவடிக்கையாகும் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் மூலம் 10 லட்சம் பேருக்கு நேரடியாகவும், 30 லட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றார்.

உற்பத்தி துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<<

பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டம் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாட்டு மக்கள் அனைவருக்கும் வங்கிக் கணக்கு இருக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் பத்தாண்டுகளுக்கு முன்பு இதே நாளில் இந்த திட்டத்தை தொடங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ், 53 கோடிக்கும் மேற்பட்டோர் வங்கிக் கணக்கை தொடங்கியுள்ளதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் வரும் 31ஆம் தேதி அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கிடைக்கும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

இம்மாதத்திற்கான பொருட்களை பெறாத குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு உணவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொதுவாக மாதத்தின் கடைசி நாளில் இன்றியமையா பண்டங்கள் விநியோகம் செய்யப்படுவதில்லை என்றபோதிலும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவை தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இன்று அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் பங்கேற்றனர்.

தமது துறையின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் இந்த கூட்டத்தில் விரிவாக ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தேசிய நல்லாசிரியர் விருது மதுரையைச் சேர்ந்த திரு. முரளிதரனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

38 ஆண்டுகளாக தொழில்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வரும் தமக்கு கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் இந்த விருது என்று திரு. முரளிதரன் மதுரையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

>>>>><<<<<

வங்கககடலில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் திரு. பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட — பாலச்சந்திரன் 26 செகண்ட்ஸ்)

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் திரு. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சென்னை மண்டல மத்திய மக்கள் தொடர்பகம் ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் புகைப்பட கண்காட்சி தென்காசியில் தொடங்கியது.

இதன் ஒரு பகுதியாக 'பெண் குழந்தைகளை காப்போம், அவர்களுக்கு கல்வி கற்பிப்போம்' விழிப்புணர்வு முகாமும் நடைபெற்றது.

பெண் குழந்தைகள் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அறிந்து கொள்வதற்கு இந்த முகாம் உதவியதாக இதில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

ராக்கெட்டிலிருந்து செயற்கைக்கோளை பிரிக்கும் இலகுரக அதிநவீன தொழில்நுட்பம் குறித்த உரையாடல் நிகழ்ச்சிக்கு சென்னை வானொலியின் மாநில செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த ராக்கெட் விஞ்ஞானி கிளிண்டன் ஆண்டனியுடன் எமது செய்தியாளர் எஸ். ஜாய் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சி நாளை காலை 8.30 மணி முதல் 9.00 மணிவரை ஒலிபரப்பாகவுள்ளது.

பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 16 ஆயிரத்து 800 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்ககப்பட்டிருப்பதாக ஆட்சியர் திருமதி. உமா கூறியுள்ளார்.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து ஆட்சியர் திருமதி. அழகு மீனா தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு. இளம் பகவத் இன்று ஆய்வு செய்தார்.

**>>>>><<<<<**

பெரம்பலூர் மாவட்டம், அனுக்கூர் கிராமத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. கிரேஸ் பச்சாவ் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

**>>>>><<<<<**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

**>>>>><<<<<**

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே, கடமானை வேட்டையாடிய 15 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

**>>>>><<<<<**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் அருகே காட்டெருமை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

**>>>>><<<<<**

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன் ப்ரீத்சிங் தலைமையிலான இந்த அணியில், 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி சீனாவில் அடுத்த மாதம் 8ஆம் தேதி தொடங்கி 17ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**>>>>><<<<<**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று தொடங்குகின்றன.

இந்திய நேரப்படி இரவு மணி 11.30-க்கு நடைபெறவுள்ள தொடக்க விழா அணிவகுப்பில் இந்தியாவின் தேசியக்கொடியை **Sumit Antil**-ம், **Bhagyashri Jadhav**-ம் ஏந்திச் செல்லவுள்ளனர்.

அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் இந்தியாவின் சார்பில் 84 பேர் பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

பெருவில் நடைபெற்று வரும் உலக இளையோர் தடகள சாம்பியன் போட்டியின் மகளிர் வட்டு எறிதல் பிரிவில் இந்தியாவின் **Amanat Kamboj** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rakshitha Sree** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார். மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-13, 21-13 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Kai Qi Teoh**-வை வென்றார்.

**>>>>>END<<<<<**